ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2311/55 - 2022 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2022.12.23

2311/55 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 94/47 (viii)

நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 269)

6(2)(ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) ஆம் பிரிவு மற்றும் 21(2) (ஆ) ஆம் பிரிவுகளின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்:-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "மஹியங்கனை ரஜமஹா விகாரை புனித பிரதேசம்" என அழைக்கப்படும் இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) "மஹியங்கனை ரஜமஹா விகாரை புனித பிரதேசம்" என நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றில் வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்புக்கான உருவரைப் பௌதிகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க (பா.உ),**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள்
அமைச்சு

கொழும்பு,
2022, திசெம்பர் 22.


1A - G 38408 - 16 (2022/12)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

### மஹியங்கனை ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்

ஊவா மாகாணத்தின் பதுளை நிருவாக மாவட்டத்திலுள்ள மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிந்தென்ன கோரளே சிறு பிரிவின் இல. 3D பூஜாநகரய கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் 2021 ஓகத்து 20 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டுத் திட்டம் இல. B/MHY/2021/290 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக மற்றும் காணித்துண்டு இல. A அடங்கி யுள்ளதும், பரப்பளவில் 20.4268 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப் பரப்பு அடங்கலும், அதன் எல்லைகள் பின்வருமாறு:-

**காணித்துண்டு இல : A**

வடக்கு : வலயம் 11 (பகுதி) மற்றும் வலயம் 1;

கிழக்கு : வலயம் 11 (பகுதி), காணித்துண்டு இல. B மற்றும் வலயம் 5;

தெற்கு : காணித்துண்டு இல. B வலயம் 5 மற்றும் வலயம் 11 (பகுதி);

மேற்கு : வலயம் 11 (பகுதி) மற்றும் வலயம் 1.

EOG 12 - 0295